# சீறத்துன்னபி صلى الله عليه وسلم

## நாள் 19



# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: நபி (ஸல்) அவர்களைத் தடுக்க குரைஷிகள் மிகவும் பிரயாசைப்படுவது
- பகுதி 2: முஸ்லிம்களைப் புறக்கணித்தல் மற்றும் முஸ்லிம்கள் ஊரை விட்டு வெளியேறுதல்
- பகுதி 3: புறக்கணிக்கப்பட்ட காலத்தில் முஸ்லிம்களின் வாழ்க்கை
- பகுதி 4: நல்லெண்ணம் கொண்ட குரைஷிகள், புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்தல்
- பகுதி 5: புறக்கணிப்பு முடிவுக்கு வந்து மக்காவுக்குத் திரும்புதல்

## பகுதி 1: நபி (ஸல்) அவர்களைத் தடுக்க குரைஷிகள் மிகவும் பிரயாசைப்படுவது

- மாதங்கள் சில கடந்துவிட்டன. குரைஷிகளுக்கு நேர்ந்த பல பின்னடைவுகளால் அவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர். அதற்குக் காரணம் அபிசீனியாவிற்கு குடிபெயர்ந்த பெரும்பாலான முஸ்லிம்கள் மற்றும் ஹம்ஸா (ரலி), உமர் (ரலி) ஆகிய இருவரும் இஸ்லாத்தைத் தழுவியது.

- நபித்துவத்தின் 7வது ஆண்டுவாக்கில், நபி (ஸல்) அவர்களைத் தடுக்க தீர்க்கமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று குரைஷிகள் முடிவு செய்தனர்.

- எனவே குரைஷிகளின் அனைத்து கோத்திரத்தார்களும் ஒரு நாள் ஒன்று கூடி, முஸ்லிம்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஒரே வழி, நபி (ஸல்) அவர்களைக் கொல்வதுதான் என்று முடிவு செய்தனர்.

- பனுஹாஷிம் குலத்தலைவர் அபுதாலிப், நபி (ஸல்) அவர்களை குரைஷிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், அதற்கு ஈடாக அபுதாலிப் எவ்வளவு இரத்தப் பணம் (நபியை குரைஷிகள் கொல்வதற்காக) கேட்டாலும் கொடுத்து விடலாம் என்றும் குரைஷிகள் முடிவு செய்தனர்.



- பழிவாங்கும் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக, மக்காவிற்கு வெளியில் இருந்து ஒரு மூன்றாம் நபர் மூலம் நபி (ஸல்) அவர்களை கொல்லவும் தீர்மானித்தனர்.

- இறுதியாக குரைஷிகள் அபுதாலிபிடம் வந்து, ''இப்போது உங்களுக்கு தேர்வு செய்வதற்கு எதுவும் இல்லை''.

- ''ஒன்றுநீங்கள்முஹம்மது(ஸல்)அவர்களைஎங்களிடம்ஒப்படைத்துவிடுங்கள்; நீங்கள் கேட்கும் இரத்தப் பணத்தை நாங்கள் தந்து விடுகிறோம்; அல்லது நாங்கள் உங்களை குரைஷி மக்களிடமிருந்து துண்டித்து விடுவோம்''.

- ''உங்கள் கோத்திரத்தை குரைஷிகள் முற்றிலும் புறக்கணிப்பார்கள். நீங்கள் உணவு மற்றும் தண்ணீர் பெற நாங்கள் அனுமதிக்க மாட்டோம். உங்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்ளமாட்டோம். உங்களுடன் எந்த வியாபாரப் பரிவர்த்தனையும் செய்ய மாட்டோம்'' என மிரட்டினர்.

- இதைக் கேட்ட அபுதாலிப் ஆவேசமடைந்து, ''உன் விருப்பப்படி செய்; நான் என் சகோதரர் மகனை உன்னிடம் ஒருபோதும் ஒப்படைக்கப் போவதில்லை'' என்றார்.

## பகுதி 2: முஸ்லிம்களைப் புறக்கணித்தல் மற்றும் முஸ்லிம்கள் ஊரை விட்டு வெளியேறுதல்

- அபுதாலிப் தனது பனுஹாஷிமின் குடும்பத்தார்களிடம் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து, நபி (ஸல்) அவர்களைப் பாதுகாக்குமாறு உறுதியான வேண்டுகோள் விடுத்தார்.

- பனுஹாஷிமின் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் அனைவரும் அபுதாலிப் கூறியதை ஏற்றுக்கொண்டனர். ஆனால், அவரது சகோதரர் அபுலஹப் மட்டும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் சிலை வழிபாட்டாளர்களின் கூட்டத்தில் இருந்தார்.

- அவர்கள் முஸ்லிம்களை எல்லா விதத்திலும் புறக்கணித்தனர்.

    - எந்த பொருளையும் பனுஹாஷிமியரிடம் விற்கவோ, வாங்கவோ மாட்டார்கள்.

    - பனுஹாஷிமியருடன் யாரும் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள்.

    - பனுஹாஷிமியருடன் எந்த சமூகக் கூட்டங்களும் நடைபெறாது.

- பனுஹாஷிமியருக்கு உணவும், தண்ணீரும் மறுக்கப்பட்டது.

- இது பொருளாதார, அரசியல் மற்றும் சமூக புறக்கணிப்பு. புறக்கணிப்பை உறுதி செய்வதற்காக, குரைஷிகள் ஒன்று கூடி, ஒரு ஒப்பந்தத்தை தங்களுக்குள் எழுதிக் கொண்டு, அதை கஃபாவின் உள்ளே தொங்கவிட்டனர்.

- புஜத் இப்னு அமீர் என்பவர் இந்த ஒப்பந்தத்தை எழுதியதாக கூறப்படுகிறது. நபி (ஸல்) அவர்கள் புஜத்துக்கு எதிராக துஆ செய்தார்கள். புஜத் இறக்கும் வரை அவரது கை செயலிழந்து இருந்தது.



- முஸ்லிம்கள் மக்காவின் கடைகளுக்கு செல்ல முடியவில்லை என்றால், அவர்கள் மக்காவை விட்டு வெளியேறி விடவேண்டும் என்று இறுதியாக அபுதாலிப் முடிவு செய்தார்.

- எனவே பனுஹாஷிம் கோத்திரத்தைச் சேர்ந்த அனைவரும் (அபூலஹப் தவிர) மக்காவிற்கு வெளியே உள்ள ஒரு பள்ளத்தாக்கில் குடியேறினர்.

## பகுதி 3: புறக்கணிக்கப்பட்ட காலத்தில் முஸ்லிம்களின் வாழ்க்கை

- இந்த முழுப் புறக்கணிப்பு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் நீடித்தது.

- பனுஹாஷிம் மக்கள் மழை நீரைக் குடித்துக்கொண்டும், இலை, தழைகளை

சாப்பிட்டும் உயிர் வாழ்ந்தனர்.

- இந்நாட்களில் அவர்களின் ஊட்டச்சத்து பற்றாக்குறையை விளக்கும் பிலால் (ரலி) அவர்கள், ‘‘நாங்கள் ஆடுகள் மலம் கழித்ததைப் போல மலம் கழித்தோம்; யாரும் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியாது’’, என்று கூறினார்கள்.

- அந்த காலகட்டத்தில் சில வாரங்களுக்கு ஒருமுறை, குரைஷிகளைச் சேர்ந்த ஒருசிலர் அவர்கள் மீது பரிதாபப்பட்டு, சில உணவுகளை அவர்கள் வசிக்கும் பள்ளத்தாக்கிற்கு அனுப்புவர். அதுதான் அவர்கள் இயல்பான உணவை சாப்பிட்ட சில தருணங்கள் ஆகும்.



- அவர்களில் மிகவும் குறிப்பிடும்படியானவர் முத்ஈம் இப்னு அதியி. அவர் ஒரு ஒட்டகத்தில் தானியங்கள், தண்ணீர் மற்றும் பிற பொருட்களை ஏற்றி பள்ளத்தாக்கிற்கு அருகில் கொண்டு செல்வார். பின்னர் ஒட்டகத்தை அதன் முதுகில் அடித்து முஸ்லிம்கள் வசிக்கும் பள்ளத்தாக்குக்குள் அனுப்புவார்.

- இவ்வாறு உதவி செய்த மற்றொரு முக்கிய நபர் கதீஜா (ரலி) அவர்களின் மருமகனான ஹக்கீம் இப்னு ஹிஜாம் ஆவார்.

- வெளிநாட்டினர் மக்காவிற்கு வருகை தரும் போது, பனுஹாஷிம் மக்கள் அவர்களிடம் பொருட்கள் வாங்க முயன்றனர். ஆனால் அபூஜஹ்ல் அவர்களைத் தடுத்து நிறுத்திவிடுவான்.

- பனுஹாஷிம் மக்கள் கொடுக்க முன்வந்த பணத்தைவிட இரண்டு மடங்கு கொடுப்பதாக வெளிநாட்டவர்களிடம் அபூஜஹ்ல் கூறுவான்.

- இவ்வாறாக பனுஹாஷிம் மக்களுக்கு வாழ்க்கை மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் அவர்கள் அதைத் தாங்கிக் கொண்டனர்.

- இதற்கிடையில், நபி (ஸல்) அவர்கள் மக்களை குறிப்பாக ஹஜ் காலத்தில் மக்காவிற்கு வரும் வெளியூர் மக்களை இஸ்லாத்திற்கு தொடர்ந்து அழைப்பு விடுத்தார்கள்.

## பகுதி 4: நல்லெண்ணம் கொண்ட குரைஷிகள், புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்தல்

- இவ்வாறான புறக்கணிப்பு வாழ்க்கை மிகவும் கடுமையானதாக இருந்ததால், குரைஷிகளுக்கு எதிராக நபி (ஸல்) துஆ செய்யத் தொடங்கினார்கள்.

- ஒரு நேரத்தில் நபி (ஸல்) அவர்கள் குரைஷிகளுக்கு எதிராக துஆ செய்து, ''யா அல்லாஹ்! யூசுப் (அலை) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போன்று இவர்களுக்கும் அனுப்புவாயாக!'' என்று கேட்டார்கள்.

- நபி (ஸல்) துஆ ஏற்கப்பட்டு, குரைஷிகள் மிகவும் மோசமான பஞ்சத்தை அனுபவிக்கும்படி அல்லாஹ் ஏற்பாடு செய்தான். அவர்கள் இறந்த சடலங்களையும், விலங்குகளின் தோலையும் சாப்பிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

- குரைஷிகள் இது நபி (ஸல்) அவர்களின் துஆவின் காரணமாக ஏற்பட்டு இருக்க வேண்டும் என்று எண்ணி, பதற்றத்தைத் தணிக்க சில தூதர்களை பனுஹாஷிம் மக்கள் தங்கியிருந்த இடத்திற்கு அனுப்பினார்கள்.

- இதற்கிடையில், பனுஹாஷிம் மக்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் அனைத்தும் தவறு என்ற எண்ணம் குரைஷிகள் மத்தியில் பெருகியது.

- நல்லெண்ணம் கொண்ட சில குரைஷிகள் மற்றும் முக்கிய நபர்கள் ஒன்று கூடி புறக்கணிப்பை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சியில் இறங்கினர்.

- அவர்களில் முக்கியமானவர்கள் ஹிஷாம் இப்னு அம்ர், முத்ஈம் இப்னு அதியி மற்றும் ஸுஹைர் இப்னு அபி உமைமா.

- மறுநாள், குரைஷிகள் கஃபாவின் அருகே அமர்ந்து நகர விவகாரங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது, ஸுஹைர் எழுந்து, ''எவ்வளவு

காலத்துக்கு நாம் நமது சொந்தங்களையும், உறவினர்களையும் பட்டினியால் இறக்க வைக்கப் போகிறோம். நாம் செய்யும் இவை அனைத்தும் மிகவும் தீய செயல்கள் ஆகும்'' என்று கூறினார்.

- அபூஜஹ்ல் கோபமடைந்து, ''நீங்கள் என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்? நாம் அனைவரும் ஒப்பந்தம் செய்துகொண்டுதான் இவ்வாறு செய்கிறோம்'' என ஆவேசமாக கூறினான்.

- இதைக் கேட்டதும் ஹிஷாம் எழுந்து நின்று, ''இல்லை! நான் இதை ஒப்புக்கொள்ளவில்லை. நீ உன் யோசனைப்படி தன்னிச்சையாக இந்த உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டாய்'' எனக் கூறினார்.

- அப்போது முத்ஈம் எழுந்து நின்று, ''நாங்களும் இதை ஒப்புக்கொள்ளவில்லை. நீ இதை எங்கள் மீது திணித்து விட்டாய்'' என்று கூறினார். இதனைப் பார்த்த அபூஜஹ்ல், தன்னை தற்காத்துக் கொள்ள வேண்டும் என எண்ணினான்.

- இப்படியாக புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவர திட்டமிட்டவர்கள் ஒருவர் பின் ஒருவராக எழுந்து நின்று கூறினர். அபூஜஹ்லுக்கு ஆதரவாக யாரும் இல்லை.

- ஏதோ தவறு இருப்பதை உணர்ந்த அபூஜஹ்ல், ''நிச்சயமாக இது நீங்கள் அனைவரும் வகுத்த திட்டம்'' என்றான்.

- இருப்பினும், பனுஹாஷிமை ஆதரிக்கும் நோக்கில், மக்கள் கருத்தை உருவாக்கும் இந்தத் திட்டம் வெற்றி பெற்றது.

## பகுதி 5: புறக்கணிப்பு முடிவுக்கு வந்து மக்காவுக்குத் திரும்புதல்

- குரைஷிகளிடமிருந்து, பனுஹாஷிமுக்கு ஆதரவாக மக்கள் அலை திரும்பிய சம்பவத்தை இப்போது பார்ப்போம்.

- ஒரு நாள், நபி (ஸல்) பள்ளத்தாக்கில் இருந்த அபுதாலிபிடம் சென்று, ''பிஸ்மிகா அல்லாஹும் (அல்லாஹ்வின் பெயரால்) என்ற வார்த்தையைத் தவிர, குரைஷிகள் எழுதிய ஒப்பந்தத்தை எறும்புகள் தின்றுவிட்டதாக அல்லாஹ் எனக்கு அறிவித்துள்ளான்'' என்று கூறினார்கள்.



- அபுதாலிப் மீண்டும் இதை உறுதிப்படுத்த நபி (ஸல்) அவர்களிடம், ''உங்கள் இறைவன் இதை உங்களிடம் சொன்னாரா?'' எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''ஆம்!'' என உறுதியோடு பதிலளித்தார்கள்.

- இதைக் கேட்ட அபுதாலிப், ''இதற்காக நான் முழு முயற்சி எடுத்து, ஒரு தீர்வை பெற முயற்சிக்கிறேன்'' என்றார்.

- பின்னர் புறக்கணிப்புக்குப் பிறகு முதல் முறையாக அபுதாலிப், தனது கோத்திரத்தார்களின் ஒரு குழுவுடன் மக்காவுக்குத் திரும்பினார்.

- அவர் குரைஷிகளின் தலைவர்களையும், மக்களையும் அழைத்து அவர்களிடம், ''என் மக்களே! நாம் எல்லாவற்றையும் மறந்துவிடுவோம். நீங்கள் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தை எடுத்து வாருங்கள். நாம் அதன்பின்பு ஒரு முடிவுக்கு வரலாம்'', என்று கூறினார்.

- இதைக்கேட்ட குரைஷிகள் மகிழ்ச்சியடைந்தனர். அபூதாலிப் ஏதோவொரு தீர்வுக்கு இசைந்து, ஒருவேளை அவர் நபி (ஸல்) அவர்களை தங்களிடம் ஒப்படைத்து விடுவார் என எண்ணினர்.

- எனவே அவர்கள் ஒரு துணியில் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தத்தை வெளியே கொண்டு வந்து, ஒரு மேசை மீது வைத்தார்கள்.

- பிறகு அபுதாலிப், ''பிஸ்மிகா அல்லாஹும் என்ற வார்த்தைகளைத் தவிர, ஒப்பந்தத்திலுள்ள அனைத்து வார்த்தைகளையும் எறும்பு அரித்துவிட்டது.

இத்தகவலை அல்லாஹ் எனது சகோதரர் மகனிடம் கூறியுள்ளான். ஆதலால், இனி இந்த ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது'' எனக் கூறினார்.

- மேலும் அவர், '' இது உண்மையாக இருந்தால், நாங்கள் மக்காவுக்குத் திரும்பி விடுவோம். அது உண்மை இல்லையென்றால், நான் முஹம்மது (ஸல்) அவர்களை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன்; நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்'' என்று கூறினார்.

- அபுதாலிபின் இந்த பரிந்துரை எல்லா வழிகளிலும் சரியாக இருந்ததால், குரைஷிகள் அதனை உடனடியாக ஒப்புக்கொண்டனர்.

- அதனால் துணியை திறந்து பார்த்த அவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சி காத்திருந்தது. அல்லாஹ்வின் பெயரைத் தாங்கிய வார்த்தைகளைத் தவிர, ஒப்பந்தம் முழுவதையும் எறும்புகள் தின்றுவிட்டன.

- குரைஷிகள் கோபமடைந்து, இது முஹம்மது (ஸல்) அவர்கள் செய்த சூனியம் என்று கூறினார்கள்.

- ஆனால் முதலில் வாக்குறுதி கொடுத்துவிட்டதால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

- இவ்வாறாக பனுஹாஷிம் மக்கள், நபி (ஸல்) மற்றும் அவர்களது தோழர்கள் மக்காவிற்குத் திரும்பினர்.